மேலும், எங்கெங்கு இருபாலர் அரசுக் கல்லூரிகள் இருக்கின்றனவோ, அங்கு 33 சதவீத அடிப்படையிலும் மாணவியர் சேர்ந்து படிக்க வருகிறார்கள். பொதுவாக பெண்கள் இந்தக் காலத்திலே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படித்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அளவில் எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் மட்டும் இன்றைக்கு 8,603 கல்லூரிகள் உள்ளன. மக்கள் தொகை அடிப்படையில், தமிழ்நாடு 7-வது இடத்தில் இருக்கிறது. ஆனால், கல்லூரிகளினுடைய எண்ணிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு 5-வது இடத்தில் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு மக்கள் தொகை அடிப்படையில், ஆந்திரா முதலிடத்தில் உள்ளது. உத்தரப்பிரதேசத்தில் 18 கோடி பேர் இருக்கிறார்கள். இருப்பினும், கல்லூரிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், அது நான்காவது இடத்தில்தான் இருக்கின்றது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் 1,028 கல்லூரிகள் உள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மக்கள் தொகையில் 7-வது இடத்தில் இருந்தாலும், உயர் கல்வித் துறையில், கல்லூரிகளின் எண்ணிக்கையில், 651 கல்லூரிகளைப் பெற்று, ஐந்தாவது இடத்தில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 370, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

370—

நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டம்

***21031—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, பூங்குளம் ஊராட்சியில் நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2013 மே 2]

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக வேலூர் மாவட்டம், தும்பேரி நீர்வடிப் பகுதியிலும், திருச்சி மாவட்டம், நாட்டார்பட்டி நீர்வடிப் பகுதியிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முன்னோடித் திட்டத்தின் பயன்பாட்டினைக் கண்டறிந்த பின்னர், பிற நீர்வடிப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, தற்போது வாணியம்பாடி தொகுதி, பூங்குளம் ஊராட்சியில் நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டத்தினை உடனடியாகச் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் தமிழர்களின் தலைமகள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, ஏய்த்துப் பிழைக்கும் கூட்டத்தை ஏமாற்றம் அடையச் செய்து ஏழையெளிய மக்கள் ஏற்றம் பெற எண்ணிலடங்கா திட்டம் தந்து, வான்மழை பொய்த்தாலும் வஞ்சகர் நீர் தர மறுத்தாலும், உழுதவர் சிந்திய கண்ணீர் உலர்ந்திடும் முன்னரே உதவிகள் பல செய்திட்ட உழவர்களின் பாதுகாவலர் எங்கள் அம்மாவின் பொற்பாதம் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பூங்குளம் ஊராட்சியானது, கிழக்குத் தொடர்ச்சி மலையான ஜவ்வாது மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்த ஊராட்சியில் 12,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். வாக்காளர்களின் எண்ணிக்கை 6,000-க்கும் மேல் உள்ளது. இந்த ஊராட்சியின் மொத்த நிலப்பரப்பு

1,759 ஹெக்டேர் ஆகும். 4,344 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த ஊராட்சியைச் சேர்ந்த மக்கள் 100 சதவீதம் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இங்கு, 'நவப்ரா' திட்டம் ஒரு பகுதியில் மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களிடத்திலே மேற்கண்ட ஊராட்சியின் நிலை குறித்துத் தெரிவித்து, மலைப் பகுதி என்பதாலும், 100 சதவீதம் விவசாயத்தை மட்டுமே நம்பி உள்ள விவசாயிகளின் நலன் கருதி, பசுமைத் திட்டத்தையாவது செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2012-2013 ஆம் ஆண்டில் நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டம் என்னும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் விதை முதல் விற்பனை வரையிலான விவசாயிகளின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், அனைத்து வேளாண்மை மற்றும் தொடர்புடைய துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம், நீர்வடிப் பகுதி திட்டங்கள்மூலம் அமைக்கப்பட்டுள்ள நீர்வள, நிலவள ஆதார அமைப்புகளை மையமாக வைத்து, தொகுப்பு நிலங்கள் அமைத்து உற்பத்தியைப் பெருக்கவும், மதிப்புக் கூட்டவும், சந்தைப்படுத்தவும், உறுதி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பயன் அடிப்படையில், தேவையிருப்பின், சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

2013 மே 2]

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதி, பூங்குளம் ஊராட்சிக்கு, தேவை ஏற்படின், பசுமைத் திட்டத்தினைச் செயல்படுத்த ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர், திராவிட இயக்கத்தின் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வியை ஒட்டியே கேளுங்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

டாக்டர் ச. துரையப்பா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 371, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

371—

சொந்தக் கட்டடம்

*__8547__—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி கல்லல் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*